2022-23-ஆம் கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்ட மாணவ-மாணவியருக்கு மட்டும்)

(பக்கங்களின் எண்ணிக்கை : 2)

**SUBJECT CODE 22 UTM 102**

**REG.NO:**

**என்.ஜி.எம். கல்லூரி (தன்னாட்சி) :: பொள்ளாச்சி**

**பருவ இறுதித் தேர்வுகள் : டிசம்பர் – 2022**

**பி.ஏ. தமிழ் இலக்கியம்** **மதிப்பெண்கள் : 50**

**முதல் பருவம்** **நேரம் : 3 மணி**

## பகுதி – III

## அற இலக்கியம்

**பகுதி – அ** **(10 x 1 = 10 மதிப்பெண்கள்)**

**பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக** **(K1)**

1. காதலர் இல்லாதபோது கொலைக்களத்துப் பகைவர் போல வருவது எது?

   அ) நிலவு ஆ) தென்றல் இ) மாலைக் காலம் ஈ) கடல் அலை

2. ஒருவரது குலத்தைச் சிதைப்பது எது?

   அ) ஒற்றுமையின்மை ஆ) கூடார்கண் கூடல் இ) பொய் ஈ) செல்வம்

3. இனிப்பான உணவை எப்போது உண்ண வேண்டும்?

   அ) முதலில் ஆ) இடையில் இ) கடைசியில் ஈ) முப்போதும்

4. ஓதுதலைக் காட்டிலும் சிறந்ததாக முதுமொழிக் காஞ்சி எதனைக் குறிப்பிடுகிறது?

   அ) அடக்கமுடைமை ஆ) அன்புடைமை இ) பொறையுடைமை ஈ) ஒழுக்கமுடைமை

5. தாளுண்ட நீரைத் தலையாலே தான் தருவது எது?

   அ) மாமரம் ஆ) கமுகு இ) தென்னை ஈ) பனை

**பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு சொற்களில் விடை தருக.** **(K2)**

6. ‘மக்கட் பதடி’ என வள்ளுவரால் சுட்டப்பெறுபவர் யார்?
7. நல்வினையைக் கட்டும் கயிறாக நல்லாதனார் கூறுவன யாவை?
8. ஆசிரியரின் நெஞ்சில் நோய் போன்ற மாணாக்கர் யாவர்?
9. போய்ப் பார்க்கலாக இடங்களாக ஏலாதி குறிப்பிடும் இடங்களுள் எவையேனும் இரண்டனைக் குறிப்பிடுக.
10. சிவபெருமான் மீது கல்லெறிந்தவர் யார்?

**பகுதி – ஆ** (5x 3=15 மதிப்பெண்கள்)

**பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு விடையளிக்க.**

**(K3)**

11. அ) சினங்கொள்வதன் தீமைகளாகத் திருவள்ளுவர் உரைப்பன யாவை?

    (அல்லது)

    ஆ) ஆராய்ந்து நட்புகொள்வதன் அவசியத்தை வள்ளுவர் எங்ஙனம் வலியுறுத்தியுள்ளார்?

12. அ) அறஞ்செய்தல் குறித்து திரிகடுகம் விளம்புவன யாவை?

(அல்லது)

ஆ) கற்றறிந்தார் செயல்களாக நல்லாதனார் கூறுவனவற்றைத் தெளிவுபடுத்துக.

13. அ) ஆசிரியர், மாணாக்கர் இயல்புகள் குறித்து சிறுபஞ்சமூலம் விளம்புவதை எடுத்துரைக்க.

(அல்லது)

ஆ) உணவு உண்ணும் முறை குறித்து ஆசாரக்கோவை குறிப்பிடுவது யாது?

14. அ) அறிஞர்கள் பழித்துரையாத செயல்களை முதுமொழிக்காஞ்சி வாயிலாகச் சுட்டுக.

(அல்லது)

ஆ) துறவிக்கும் அமைச்சனுக்கும் இருக்க வேண்டிய பண்புகளை ஏலாதி வழி குறிப்பிடுக.

15. அ) அறங்கூறுதல் குறித்து முனைப்பாடியார் உரைப்பன யாவை?

(அல்லது)

ஆ) கல்லாதவர் பற்றி மூதுரை கூறுவனவற்றைப் புலப்படுத்துக.

**பகுதி – இ** (5x5=25 மதிப்பெண்கள்)

**பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு விடையளிக்க.**
**(K4/K5)**

16. அ) குறிப்பறிதல், பொழுதுகண்டு இரங்கல் குறித்து திருவள்ளுவர் கூறியதை தெளிவுபடுத்துக.

(அல்லது)

ஆ) கல்வியின் சிறப்புகளை நாலடியார் வழி விவரிக்க.

17. அ) நான்மணிக்கடிகை நவிலும் அறக்கருத்துக்களைத் தொகுத்தெழுதுக.

(அல்லது)

ஆ) நும் பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள திரிகடுகப் பாடல்கள் வழி அறியலாகும் செய்திகளைத் தொகுத்தெழுதுக.

18. அ) பெருவாயின் முள்ளியார் குறிப்பிடும் வாழ்வியல் ஆசாரங்களை விவரிக்க.

(அல்லது)

ஆ) முயற்சியின் இன்றியமையாமை குறித்து பழமொழி நானூறு உரைப்பனவற்றை விளக்குக.

19. அ) சிறந்த பத்து, அறிவுப் பத்து ஆகியவற்றின் வழி அறியலாகும் கருத்துக்களை எடுத்துரைக்க.

(அல்லது)

ஆ) மனித வாழ்வில் இனிமை பயக்கும் செயல்களாகப் பூதஞ்சேந்தனார் கூறுவனவற்றை விவரிக்க.

20. அ) நும் பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள நல்வழிப் பாடல்கள் உரைக்கும் அறநெறிகளை ஆய்ந்துரைக்க.

(அல்லது)

ஆ) நன்னெறி உரைக்கும் நல்லறக் கருத்துக்களை மதிப்பிடுக.

------------------------------